
பிரியசித்ரா


# ஹைவே 117




புஷ்பா தங்கதுரை


117
ரங்கபட்டினம் ரயில்வே
ப்ளாட்பாரத்தில் கவிதா-
அடடா...
ரயில்
கிளம்பி
விட்டது...
புஷ்பா தங்கதுரை


தாவி ஏறி ரயிலுக்குள் வந்த கவிதா—
வழிலே என் பெட்டியைப் போட்டிருக்கீங்க?
ஸாரி. என் ஒத்தனலே அதைத் தூக்க முடியலே
இதையா?
ஒரே வீச்சில் அந்தப் பெட்டியை மேலே தூக்கிப் போட்டாள் கவிதா—
மை குட்னஸ்!
நீங்க கராத்தே கவிதாதானே?
எப்படித் தெரிஞ்சுது?
உங்க கை பேசிற்று!
காராத்தே கான்: பரன்ஸ்


மேல் பர்த்தில் யாரோ ஒருவன்-
யார் இந்த ஆசாமி? புத்தகம் தலை கீழாக இருக்கிறது... வாசிக்கிற மாதிரி பாவனை... ரயில் திருடன்?? ...அந்தப் புத்தகத்தில் TAL...TAL... என்று ரப்பர் ஸ்டாம்ப் குத்தியிருக்கிறது. என்ன அது?
நான் உமேஷ். எ டாக்டர் இன் ஆர்கியாலஜி
ஐ ஸீ!
வண்டியெல்லாம் அபூர்வமா காலி!
ஜாக்கிரதை! தூங்கிடாதீங்க, உமேஷ்


நிச்சயம் டைம் மேக்-அப் பண்ண முடியாது. லேட்தான்
போச்சு! யாரோ சங்கிலியை இழுத்துட்டாங்க!
படா பேஜாரு! அவங்களை விட்டேறை பார்
யாரு சங்கிலியை இழுத்தான்னு கேட்டா பேசாம இருக்கிறீங்க?


மேல் பர்த் ஆசா மியைக் காணோம்.
அதோ அவர் களாத்தான் இருக்கும்.
வண்டியை விட்டு இறங்கத்தான் சங்கிலியை இழுத்திருப்பாங்க. இது எந்த ஊர்?
சுப்பிரமணிய புரம். புகழ்பெற்ற ஸ்தலம்.


ஸீ யூ! பை...
பை, பை!
விடிந்ததும் காவேரிநகர் பிளாட்பாரத்தில் ரயில் நின்றது-
நல்ல வாலிபனாக இருக்கிறான்...
காத்தே முகாமில், தனிமையில் கவிதா-
அந்த ஆசாமியாக இருக்குமோ?
சுப்ரமணிய புரம் கோயில் திருட்டு
நவரத்தின முருகன் சிலை,வெள்ளிக் கும்பா, தாலிச் சரடுகள் காணவில்லை.



அனேகமா அவனாத்தான் இருக்கும்!
காலத்தே கான்பரன்ஸ் முடிந்து கவிதா ஊர் திரும்பும் பின்னர் -
அன்று மாலை சாலையில் -
ஹாய் உமேஷ்!
நீங்களா?
எங்காவது காஃபி சாப்பிட வாரமா?
ஓ, யெஸ்!
நவரத்தின முருகர் ரொம்பப் பழமையானது. 2 லட்சம் விலை இருக்கும் அது போனது வருத்தமா இருக்கு. போலீஸ் என்ன செய்றங்க!
அவங்களையே கேட்போம்


உமேஷ்! நீங்க தொல்பொருள் ஆராய்ச்சியாளர். உங்க கவலை நொயமானதுதான். உங்களை டிடெக்டிவ் இன்ஸ்பெக்டர் கோபால்கிட்டே அனுப் பறேன்.
நான் ஜீ.ஜீ.. கிட்டே அழைச் சிட்டுப் போறேன். எனக்கு அவர் அறிமுகம் உண்டு.
டிடெக்டிவ் கோபால் அறை
இது மூணாவது கேஸ். கிருஷ்ணைலம், பஞ்சவபுரம் ரெண்டிலேயும் இதேமாதிரி திருட்டு நடந்தாச்சு.
ஒரு பெரிய அறிவாளிதான் இதுகளை நடத்தி யிருக்கணும்.
அதெப்படிச் சொல்றீங்க?
ஒண்ணு: அந்த ஆளு ஒதுக்குப்புறமான கோயில் களைப் பிடிக்கிறான். ரெண்டு: எந்தவிதத் தடயமும் விட்டுவிட்டுப் போவது கிடையாது.


வெளியே வந்தார்கள் -
எனக்கு என்னவோ அவங்க பேச்சிலே நம்பிக்கையில்லே.
அதுக்கு நீங்க என்ன செய்ய முடியும்?
நாமே துப்பறிஞ்சா என்ன?
க்ரேட் ஐடியா! எனக்கும் துப்பறிய ஆசையா இருக்கு!
கவிதா, நீ இதிலே சேருவது ஆபத்து.
எனக்குத் துணை இருக்கு!
என்ன துணை?
என் கராத்தே!
நாளைக்கே தொடங்கறோம். முதல்லே பஞ்சவபுரம் போறோம்.
ரெண்டாவது திருட்டு நடந்த இடமா?
ஆமா.


மறுநாள்-
ஒரு தனியான இடத்தில்
அவர்களை இறக்கிவிட்டுவிட்டு
பஸ் சென்றது-
ஒரே காடா இருக்கே...
அருகிலுள்ள அந்த கிராமத்தில் பார்த்தசாரதி சன்னிதி எதிரில் அவர்கள் வந்த போது-
பெருமாளுடைய தாங்கக் கிரீடம் போச்சு. தாயாரோட பதக்கத்தையும் அறுத்திட்டுப் போயிட்டாங்க. கேட்பாரில்லை..
இவர் கோயில் அர்ச்சகர்போலிருக்கு..
போலீஸ் வரலையா?
சன்னிதி வரைக்கும் நாயைக் கொண்டுவந்தா. என்னை மிரட்டிறை. அதுதான் மிச்சம். திருட்டைக் கண்டு பிடிக்கலை.
ஐயோ நேரமாச்சே பஸ் போயிருக்குமே.
ரங்கபட்டினம் தானே போகணும். ரயில் இருக்கு.


சுற்றிலும் காடாயிருக்கும் பஞ்சவபுரம் ரயில் நிலையம்—
திருட்டு நடந்த அன்னிக்கு யாராவது ரயிலில் வந்து இறங்கி னார்களா?
யாரு மில்லை
பஞ்சவபுரம்
கூட்ஸ்வண்டி ஏதாவது வந்து நின்றதா?
நிற்கலையே! 808 எக்ஸ்பிரஸ் மட்டும் ஸ்டேஷன் அவுட்டர்லே நின்னுது. சங்கிலியை யாரோ இழுத்துட் டாங்க...
ஓகோ இங்கேயும் சங்கிலி இழுத்து ரயிலை நிறுத்தித் திருடப் போயிருக்காங்க.
வேறு என்ன நடந்தது?
ஒரு மாசம் கழிச்சு ஒரு அழுகிப் போன பிணம் கிடைச்சுது. அதைதன்னு சொல் லிட்டாங்க.
ரயிலில்—
திருடற விதம் ஒரே மாதிரி இருக்கு. சங்கிலி இழுத்து ரயில் நிறுத்தி...
ஸ்டேஷன்லே உள்ள வங்க பார்வையிலேருந்து தப்பிக்க இந்தவழி. பஸ்ஸை உபயோகிக்கிறதில்லே. ரயில் நிலையம் இருக்கிற ஒதுக்குப் புற ஊராகத் தேர்ந்தெடுத்துக்கறாங்க


அப்போ அன்னிக்கு ட்ரெய்ன்லே நாம்ப பார்த்தது அவதான் இருக்கணும்.
ஆமாம், மேல் பர்த்லே இருந் தான். நாம் சரியாக் கவனிக் கல்லே.
அப்போ ரிஸர்வேஷன் சார்ட்டிலே அவள் அட்ரஸ் இருக்கணுமே.. எங்கபட்டி ணம் போனவுடனே பார்த்தா...
ஐடியா! ஆனா அட்ரஸ் கொடுப் பாங்களா?
எனக்கு ஒரு ஆள் அங்கே சிநேகிதம்
ஓ...
ஹலோ கவிதா! உன்னைப் பார்த்தது ரொம்ப சந்தோஷம்!
ஒரு உதவி வேண்டும் ரோஸ்.
ஒரு பெண் தான்! ரோஸ்னு பேரு.
நல்ல வேளை!
14



அன்று! மாலை
அவர் யாரு உன் சிநேகிதரா?
அதுக்குள்ளே முடிவுகட்டாதே!..
ஏன்?
அவர் ரொம்ப இறுக்கம். சட்டுனு எதுவும் நடக்காது.. சரி எனக்கு ஒரு உதவி.. காலைல கேட்டேனே...
ரிஸர்வேஷன் லிஸ்ட் தானே!... தருகிறேன். ஆனா சட்டப்படி நான் யாருக்கும் அதைக் காட்டக்கூடாது.
ஆ! இதுதான்!.... காந்திநாதன், 63, ராஜமணி தெரு... குறிச் சுக்குங்க.
எஸ்..
மோட்டார் சைக்கிளா? ஸ்கூட்டர் வச்சுக்கக் கூடாதா?
நான் தான் கராத்தே வெண்றை ச்சே! வை..யை!



ராஜமணி தெரு.
பைக்கை
இங்கே வச்சுட்டு
நடந்து போவோம்..


63ஆம் நம்பர் வீடு...
காந்திநாதன் இருக்கிறாரா?
அப்படி யாருமில்லையே?!
பெரிய ஏமாற்றம்
ஒரு ஐடியா!
என்ன?
எல்லோருமே எப்போதுமே கரெக்டா இருக்கமாட்டாங்க. 36ஐ 63ன்னு எழுதியிருக்க சான்ஸ் இருக்கில்லியா?
ஓகே. அந்த நம்பரையும் ட்ரை பண்ணிடுவோம்.


லாட்ஜ் மாதிரி இருக்கு!
36, ராஜமணி தெரு. கீழே வாசல் பூட்டியிருந் தது-
மேலே போகலாம்
மேலே— கடைசி அறையைப் பூட்டிக்கொண் டிருந்தான் ஒரு ஆள்..
மிஸ்டர் நாராயண் இருக் காரா?
தெரியாது.
அவர்கள் அவன்கிட்டே போனபோது, அவன் கையிலிருந்த காகிதங் களைத் தவறி கீழேபோட்டு விட்டு அவைகளைப் பொறுக்கி எடுத்துக் கொண்டிருந்தான்
காந்திநாதன் மாதிரித் தெரி கிறதே...
அவன் கைரேகை அந்தக் கதவில் பதிந்திருக்கும்...


கீழே இறங்கிப் போய்விட்டான். அவன விட் டுட்டோமே?
சீக்கிரம் கீழே போலாம்.
கார் ஒன்று புறப்பட்டு பறந்தது—
நம்பரைக் கவனிக்காமல் விட்டுட்டோமே!
அந்த ஆள் காந்திநாதனைத் தான் இருக்கும்..
எப்படிச் சொல்ல முடியும்?
அவன் கதவிலே கை வச்சானில்லே- கை ரேகை கிடைக்கும்...
அதை வச்சு என்ன செய்வே?
பாருங்களேன் என் சாமர்த்தி யத்தை! நாளை சந்திப்போம்..



மறுநாள்—
36 ஆம் நம்பர்
கட்டிட மாடியில்-
யாராவது வராங்களா, கவனியுங்க...
கதவில் ரேகை படிந்த இடத்தில் பொடியைத்தூவி விட்டு அதை போட்டோ எடுத்தாள் கவிதா-
இப்போ நேரா ஸ்டேஷனுக்குப் போகிறோம்
போஸ்! ஒரு சின்ன உதவி? அன்னிக்கு நாங்க பிரயாணம் பண்ண வண்டி, அதாவது கம்பார்ட்மெண்டின் நம்பர் 3029. அது இப்போ எங்கே இருக்கும்?
இப்போ வரப்போற மெயில்லே இருந்தாலும் இருக்கலாம். வாங்க...
எங்கேயும் இல்லையே?
வாங்க ட்ரெய்ன் எக்ஸாமினரைக் கேட்போம்




ஹெட் எக்ஸாமினர் அறை-
3029 வண்டி க்ளீனிங்க்குப் போயி ருக்கும்.
தாங்க்யூ.
அப்போ எங்கே இருக்கும்?
யார்டிலே...
அதோ, 3029!
கொஞ்சம் நிறுத்திக்குங்க, ப்ளீஸ்..
சரிம்மா!


ஸிலிங்கில் பொடியைத் தடவி ரேகையை போட்டோ எடுத் தாள் -
இந்த இடத்திலே அவன் கை வச்சிருந்தான். ஞாபகம் இருக்கா?
கவிதா! நீங்க ரொம்ப புத்திசாலி!
மறுநாள் -
ரெண்டும் ஒத்திருக்கு. ராஜாமணி தெருவில் தென்பட்டவன் காந்தி நாதன் தான்!
ட்ரெய்ன்லே போறன். கோவில் பக்கம் இருக்கிற ஊரிலே அபாயச் சங்கிலியை இழுக்கிறன். இறங்கிப்போய் கோவில்லே திருடறன். திரும்பி வாரான்...
அவன் வீடு எங்கிருக்கும்?
அதுதான் என் கவலை யும்.


ராஜமணித் தெருவிலே காவல் நின்று கண்டுபிடிக் கலாம்.
எப்படி?
இங்கே வந்தா எப்படியும் வீட்டுக்குப் போவான். அவனைப் பின்தொடர்ந்தா...
ஐடியா! ரெண்டு பேரும் மாலை 4 மணி யிலருந்து எட்டு மணி வரை காவல் நிக்கலாம், மாத்தி மாத்தி.



முதலில் காவலுக்கு நிற்பது உமேஷ்—
தொடர்ந்து கவிதா—
கவிதா தெருவின் மறுமுனையை நோக்கித் திரும்பிய போது—
அதோ அவதான், தினமும் நிக்கறா...
நேரே அவளைப் பாத்து ஓட்டு..



கார், வேகத்தைக் குறைக்காமல் அவளை நோக்கி வந்தது
அவளை சிராய்த்துத் தள்ளிவிட்டு நின்ற காருக்குள்ளிருந்து இரண்டு அடியாட்கள் அவள்மேல் பாய்ந்து-
கவிதா தன் நிலைக்கு வருமுன் தான் ஓடும் காருக்குள் இருப்பதை உணரத்தான் முடிந்தது-


சும்மா இரு பேபி.... நோ யூஸ்!
நம்ம காட்டு வீட்டிலே கிணறு இருக்கு. ஹனிக்கு ஏற்ற இடம். அதுக்குள்ளே ஹனிக்கு சொர்க்கம் காட்டலாம்
ஆனா அந்தக் கூட்டாளி காண்பிச்சிருப் பான்...
அவனா? சுத்த மடிசஞ்சி...!
பாத்தாத் தெரியல? சாந்தி முகூர்த்த மந்திரம் சொல்ற வரை காத்திருப்பான்.



சீ.. விடு..
அப்போ நம்ப ஹனி சுத்தம்னு சொல்ற...
குடகு நாட்டுத் தேன்.. படு சுத்தம்
ஆஹா.. டேய் நம்ப பங்களா வந்திருச்சி..



கைகளை ஒரு நாற் காலியோடு கட்டி உட் காரவைத்து விட்டார்கள்
எங்கே கவிதா வைக் காணோம்?
ஹலோ கவிதா இருக் காங்களா?... இல்லையா?
பக்கத்து பங்க் கடையில் கேட்டான்—
ஒரு கறுப்புக்கார் வந்திச்சி. அதிலே போறாங்க- தெற்காலே..
போக மாட்டாங் களோ...?
கார் போச்சு.. ஆளைக் காணோம். அவ்வளவுதான்...
மை காட்! அகப்பட்டிருப்பா!



கோபமா ஹனி?
தூ... பக்கத்தில் வராதேடா..
கோபத்திலெ என்ன அழகு! உன்னுடைய கன்னி உடலெ நான் பார்க்க வேண் டாமா!
அவள் சட்டை யின் மார்புப் பகுதியைப் பெரிதாகக் கிழித்தான்.
கவிதா காலை மெள்ள நகர்த்தி ஒரு கல் லினுள் செலுத் திக் கொண்டாள்—
ஆகா என்ன காட்சி! இன்னும் முக்கியமான காட்சி பார்க் கணும்!


காலை வில்லாக்கி
முழு பலத்துடன்
கல்லை எறிந்தாள்-
அடுத்தவன்
துள்ளி
வந்தான்.
கவிதா
கட்டப்பட்ட
கையால்
நாற்காலியைத்
த்தூக்
கிக்கொண்டு
எழுந்தாள்-
நாற்காலியைச் சுழட்டியதும் —


இருவரும் சமாளித்துக் கொண்டு எழுந்து மீண்டும் அவளை நோக்கி நெருங்க....
கவிதா பம்பரமாய்ச் சுழன்றாள்...
ஒருவனை மூலையோடுவைத்து ஒரே அடி-


நாட்டுப்புறச் சாலையில் உமேஷ்—
..அப்படி ஒரு மோட்டார் வண்டி இந்த வழியாத் தான்...



குறுக்கு வழிகளில் பறந்தான் உமேஷ்...


காலால் கராத்தே உதைகள் —
இரண்டாவது ஆளும் சரியானபடி வாங்கிக் கொண்டான் —


ஜன்னல் வழியாகச் சண்டையைப் பார்த்துக் கொண்டிருந்த டிரைவர்-
ஐயோ நமக்கு வேண் டாம்பா இந்த கதி..
பொம் பளையா அது?!
தூணோடு அடித்து சேரை உடைத் தாள்-
கைக் கட்டோடு சாலைக்கு ஓடினாள்-
உமேஷ்.. எங்கே இருக்கீங்க.. என்னைத் தேடி வர்றீங்களா, உமேஷ்..?




அது உமேஷாக இருக்குமோ? ....யெஸ் ஐ ஆம் லக்கி!
உமேஷ் நில்லுங்க! நான் இங்கே இருக்கேன்..!
ஓ!
உமேஷ் பைக்கைத் திருப்பினன்-
ஆர் யூ ஆல் ரைட், கவிதா?
ஐ ஆம் ஃபைன்!
நல்லா ரெஸ்ட் எடுங்க, கவிதா...
ஓ! உமேஷ் யூ ஆர் வொண்டர்-ஃபுல்!


உமேஷின் மடியில் சாய்ந்தாள்—
உமேஷ்.. உமேஷ்..
கவிதா...
என்ன சுகம் இது!... ஐ லவ் யூ, உமேஷ்...
இதற்காகவே மீண்டும் மீண்டும் ஆபத்தில் சிக்கலாம் போல இருக்கு...!
வேண்டாம் கவிதா. இந்த முயற்சியை விட்டுவிட்டா என்ன?
இனி எப்போதும் உன்னோடு இருப்பேன் கவிதா...


நோ...நோ.. தலைவனைக் கண்டுபிடிச்சு எல்லாரையும் தண்டிச்சால் ஒழிய, எனக்கு அமைதி கிடைக்காது..
ஓ கே, கவிதா! அக்ரீட்
ஆயிரம் மலர்களே மலருங்கள்..!


மூன்று நாட்களுக் குப் பிறகு கவிதா—
போச்சு! மறுபடியும் திருட்டு... குறுமலை கோவிலில்... வைரப் பதக்கம், முத்துத் தாழ்வடம், நாச்சியார் சிலை, வெள்ளிப் பாத்திரங்கள்... கடவுளே...
உமேஷைச் சந்தித்தாள்—
அந்த முத்துத்தாழ்வடம் கிருஷ்ணதேவராயர் போட்டது. முத்து மட்டும் 50 லட்சம் பெறும்...
!
கோவில் வரைபடம் ஒன்றை உமேஷ் காட்டினான்—
அந்த ஒரு பக்கத்திலும் காவல் உண்டு. முகப்பின் இரு பக்கத்திலும் எப்போதுமே துப்பாக்கிப் போலீஸ் நிற்கிறார்கள். வெள்ளிக் கிழமை தோறும்தான் கூட்டம் வரும்.. காணிக்கை ஆயிரக் கணக்கில் வரும்...
மூன்று புறமும் செங்குத்துச் சரிவு. ஒரு பக்கத்தில்தான் படி இருக்கிறது..
நாம்ப உடனே போறோம்


பஸ் பிரயாணம்-
வெள்ளிக்கிழமையிலே கோயிலுக்குள்ளே போய் ஒளிஞ்சிருப்பாளோ?
அவன்தான் நிபுணன் ஆச்சே, செங்குத்துப் பக்கத்திலை கூட எப்படியாவது ஏறியிருப்பான்..
இந்தப் பிரதேசமே பயங்கரமானது.. எங்கும் காடு, மலை, பள்ளத் தாக்குகள்..
இங்கே போய்க் கோவில் கட்டியிருக் காங்களே..
பஸ் அவர்களை இறக்கிவிட்டுச் சென்றது—
வருஷ வருமானம் பத்து லட்சம். பணக்காரக் கோவில்..
வெகுதூரம் நடக்க வேண்டியிருக்கும். இங்கு யார் வந்தாலும் தெரிஞ்சுடுமே...
மேலே போவோம்


மேலே ஏறி கோவில் முகப்பை அடைந்ததும்-
பூஜை கிடையாதுங்க. அர்ச்சகர் மயக்கமாக ஆஸ்பத்திரியிலே இருக்கார்.
ராத்திரி கொள்ளை நடந்ததே - தடயம் ஏதாவது கிடைச்சுதா?
நேத்து ஒரு தீஞ்ச பிணம்தான் கிடைச்சுது. போலீஸ் வந்து அப்புறம் படுத்திறாங்க...
எங்கே கிடந்தது அது?
அந்த ஒத்தைப் பனைமரம் பக்கத்திலேதான். இப்படியே இறங்கிப் போகலாம். ஆனா கஷ்டம்.
ஐயோ, என்ன கஷ்டமா இருக்கு, நடக்க!
பனைமரம் அருகில் -
கவிதா! ஒரு துண்டு கருகாத துணி கிடைச்சுது!



போலீஸ் இதை விட்டுட்டாங்களே!
இத வச்சு என்ன கண்டு பிடிக்க முடியும்?
எ லாட், உமேஷ்! பாருங்க, மூணு திருட்டுக்கு அப்புறமும் மூணு பிணம் கிடைச்சிருக்கு.
சரி..?
ப்ரேதங்களை அடையாளமும் கண்டுபிடிக்க முடியல. இதிலிருந்து என்ன தெரியுது?
காந்திநாதன், திருடின பிறகு தன் கூட்டாளியைக் கொன்னுடறான்..
ஹேய்! யூ ஆர் ரைட்!
ஒவ்வொரு திருட்டுக்கும் புதிதா ஒரே ஒரு கூட்டாளி. காரியம் முடிந்ததும் உண்மை வெளிவராம லிருக்க அவனைக் க்ளோஸ் பண்ண வேண்டியது..
கவிதா.. இதப் பாத்தியா- ஒரு நூல் ஏணி!
இத வச்சுத் தான் மேலே ஏறியிருப்பான். ஆனா இதற்குமுன்னும் யாரோ உபயோகப் படுத்தினமாதிரி பழசாத் தெரியுது-


ரங்கபட்டினம திரும்பினார்கள்—
உமேஷ், இந்த நூலேணியைக் கூட்டியல்லே உபயோகிப் பாங்க.. இல்லாட்டி சர்கஸ்லே..
எப்படியும் ரங்க பட்டினத் திலேர்ந்து தான் கொண் டாந்திருக் கணும்.
ஆ! அங்கே சர்க்கஸ் நடக்குதே! ஜெமினி சர்க்கஸ்.
சர்க்கஸ் மானேஜர்—
இது எங்க நூலேணிதான். சிங்கப்பூர்லேந்து தருவிச் சது. நீங்க சொன்னமாதிரி சாமியப்பா என்கிற ஒரு ஆர்ட்டிஸ்டையும் காணல்லே.. டென்ட்லே அவர் ரெஸ்ட் இருக் காங்க..
போய்ப் பாருங்க. அவங்க ளும் எங்க ஆர்ட்டிஸ்ட் தான்.
இது எங்கே கிடைச்சுது? என் கணவர் சட்டையிலுள்ளது தான். அவர் உயிரோட இருக்
அவர் எங்கே போனார்?
யாரோ புது சிநேகம். அவரைப் பாக்க மெண்டல் ஹாஸ்பிட்டல் போறேன்னு போனாரு..
மெண்டல் ஹாஸ்பிடலா?
ஸாரி சாவித்திரி! உங்க கணவர் உயிரோடு இல்லே. விசாரணை முடிஞ்சுபின் விபரம் சொல்றோம்.
மென்டல் ஹாஸ்பிட்டல் போப்பர்...



ஹாஸ்பிட்டல் ரிஸப்ஷன்—
ஹாய், நீங்கள் காரத்தே கவிதா தானே! உங்கள் படத்தைப் பத்திரிகையில் பார்த்திருக்கேன்! நான் கல்பனா...
நீங்க சொல்ற காந்தி நாதன்னு யாருமில்லையே...
ஸ்டாஃப்லே இல்லாட்டி நோயாளியா?
அதுவும் கிடையாது...
குரூப் ஃபோட்டோ ஏதாவது இருக்கா?
வாங்க...
இது தான்!
அவர் சாந்தராஜ்... ஸ்பெஷல் வார்ட் பேஷண்ட். இப்படி வாங்க.



பணக்கார பேஷண்டுகள் இருக்கும் காட்டேஜ் பகுதிக்கு அழைத்துச் சென்றாள் கல்பனா -
போலீஸ் சந்தேகத்துக்கு இடம் கொடாமலிருக்க இந்த சாந்தராஜ் மெண்டல் பேஷண்ட் மாதிரி இருக்கான். வெளியிலே பெயரை காந்திநாதன்னு வச்சிருக்கான்.
நீ ரெடி!
ஒரே பிடி பிடிச்சுடறேன் அப்புறம் போலீஸைக் கூப்பிடலாம்
சாந்தராஜ் இல்லியே!
இப்படி அடிக்கடி காணாமல் போவாரோ?
பணம் படைச்ச வங்க. அவங்க என்ன செஞ்சாலும் கேட்கவா முடிகிறது?
அவர் அறையை நாங்க கொஞ்சம் பார்க்கணுமே... ஒரு ருசு வேணும்..
என்ன ருசு?
அப்புறம் சொல்றேன் கல்பனா...
ஓ கே!


அறையில் தேடினார்கள். வித்யாச மாக ஏதுமில்லை, ஒரே ஒரு காகிதத் துண்டைத் தவிர —
இதை நைஸாக எடுத்து வைத்துக் கொள்ள வாம்...
கல்யாணியிடம் விடை பெற்றுக்கொண்டு வெளியே வந்தார்கள் —
உமேஷ் — இதப் பாருங்க!
18ந்தேதி
1. கொரமாண்டல் எக்ஸ்பிரஸ்
2. குகைப் பக்கம் சங்கிலி இழுப்பு
3. ராஜு சந்திப்பு
4. கார்டு பலி
5. கூடை
6. கப்ளிங் அறுத்தல்
இன்னிக்குத்தான் 18ஆம்தேதி! கொரமாண்டல் எக்ஸ்பிரஸ்ஸில் அவன் போகிறான்.. இன்னும் 10 நிமிஷம்தான் இருக்கு.. பிடிப்போம்!
டாக்ஸி!
ஏறு கவிதா..


ஒவ்வொரு ஜங்ஷனிலும் கவனமாயிருப்போம். ஆள் தென்படுகிறறு பார்ப்போம்.
உமேஷ், குறுமலை வந்துண்டிருக்கு...
இங்கிருந்தே அப் கிரேடியன்ட். ஸ்டெடியா மேடுதான்
நாம் மலைக் கோவிலிருந்து பார்த்த அதே குகை வருகிறது



சரியா குகைக்குள்ள வண்டி நின்னுடுத்தே... டிரைவர் மூணு விசில் கொடுக்கிறார். தட் மீன்ஸ் யாரோ சங்கிலியை இழுத்திருக்காங்க..
இறங்கு
வண்டி திசைக்கே போவோம்...
அந்த உருவம், அவனாத்தான் இருக்கும்... ஜாக்கிரதை!
கடைசி இரண்டு போகிகள் — ஒன்று 'கார்ட்' கம் பார்சல் வான்; இன்னொன்று முழுவதுமாகப் பார்சல் வான் — குகைக்கு வெளியே நின்று கொண்டிருந்தன —
அண்ணே! கார்டைத் தீர்த்தாச்சு!
LV
தள்ளு வெளியிலே...


கார்டின் சடலம் பள்ளத்தில் தூக்கி எறியப்பட்டது –
புதருக்குள்ளிருந்து ஒரு கூடையை உருட்டி வந்தான் சாந்தராஜ் –
பார்ஸல் வண்டிக் கதவைத் திற!
சரி பாஸ்!
அந்தக் கூடையிலேதான் கொள்ளையடிச்ச விக்ரகங்கள், நகைகள் அத்தனையும் இருக்கின்றன. அன்னிக்கு ஒளிச்சி வச்சதை இன்னிக்குத் தான் எடுக்கறான்...
ரயில்தான் ஒரேவழி. ரோட்டில் போனா கண்டு புடிச்சுடுவாங்க.. கூடையை ஏத்திட்டு என்ன பண்றான்?
ஐயோ அந்த அடியாள் கடைசி ரெண்டு வண்டிகளையும் ரயிலோடு இணைத்திருக்கும் கப்ளிங்கை கழட்டறான்... சீக்கிரம் கார்ட் வானில் ஏறிப்போம்.


சிக்னல் கிடைச்சிருக்காது
ஏன் வண்டி நிக்குது?
ஏதோ ஒண்ணு.. பொறுமை
ஏன் வண்டி நிற்காது?
இஞ்சின் கோளாறு சார்...
டேய், ஓடிப் போய் கார்ட் வானில் ஏறி அப்பப்போ ஹாண்ட் ப்ரேக்கை போட்டு வேகத்தைக் கண்ட்ரோல் பண்ணு...
சரி பாஸ்!
அந்த இரண்டு பெட்டிகள் பின்புறமாக நகர ஆரம்பித்தன—
கார்ட் வானில் ஏறிய கவிதாவும் உமேஷும்—
நல்ல ஐடியா! பெட்டிகள் இறங்கி சமதளத்தில் போய் நின்றதும் அங்கிருந்து கூடையை எடுத்துக்கொண்டு போய்விடலாம்னு அவங்க திட்டம்..


சாந்தராஜ் அந்த பார்ஸல் வானில் கூடையுடன் உட்கார்ந்திருக்கான்.. அவன் சிகரட் புகை வெளியே பறக்குது..
ஹாண்ட் ப்ரேக் போட்டு ஸ்லோ பண்ணிட்டு, வெளியே குதிச்சு என் பின்னே வாங்க


யார்ரா அது..?
!
பாவம் நம்மை எதிர்பாத் திருக்க மாட்டான்.
இருவரும் கீழே குதித்து பார்சல் வானில் தொத்தி ஏறினார்கள் —



உமேஷ் அந்தக் கூடையை வெளியே தள்ளுங்க..
இதோ ஆச்சு..! நானும் வெளியே குதிச்சுடறேன்..
ஆவ்!





உமேஷ், யூ ஜம்ப் அவுட் நவ்...
ஓ கே!
சண்டை போட்டுக் கொண்டே கதவை இழுத்தாள் கவிதா-
சிறிது சிறிதாக கதவைச் சாத்த ஆரம்பித்தாள்-


ஆவ்!
ஐயோ! அம்மா! செத்தேன்..


ஹாண்டிலில் தொங்கி கதவை பூட்டிவிட்டு கீழே குதித்தாள்
உமேஷ் ப்ரேக்கை முழுவதுமாக ரிலீஸ் பண்ணிவிட்டு வெளியே குதிச்சுடுங்க!
ரைட்!
LV
பள்ளமான பாதையில் வண்டி வேகம் பிடிக்கிறதைப் பாருங்க...



வண்டிகள் பயங்கர வேகம் பிடித்தன-
இவ்வளவு வேகத்திலே கர்விலே போற பெட்டி தண்டவாளத்திலேர்ந்து வெளியிலே குதிச்சிடும்..
அதை எதிர்பார்த்துதான் இந்த வேலெ செஞ்சேன்
அந்த வளைவை நெருங்கி விட்டது-
திருப் பத்தில் சக்கரங்கள் பயங்கரமாக உளய்ந்தன



இப்போது என்ன நடக்கப் போகுதுன்னு கொஞ்சம் பாருங்க...


தண்டவாளத்தைவிட்டு
பள்ளத்துக்குள் முதலில்
'லாஸ்ட் வான்' பாய்ந்தது-
விழுந்து
நொறுங்கிற்று-


இந்த முடிவு அவனுக்கு வேண்டியதுதான்.
...இல்லாட்டா இன்னும் எத்தனை பேரைக் கொலை செய்வானோ — எத்தனை கோயிலில் கொள்ளையடிப்பானோ?




சீக்கிரம் வா மேலே போவோம்...
என்ன அவசரம்?


அந்தக் கூடையைப் பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டுபோக வேண்டியது நம் கடமையாச்சே..
கரெக்ட்!


சாந்த ராஜுக்கு ஹைவேஸில் காரியம் நடக்காது. அவனைப் பொறுத்தமட்டிலும் ரெயில்வேஸ்தான் ஹைவேஸ். அவன் ரயில்களை நிறுத்திக் கொண்டிருந்தான். ஆனால் இன்று எக்ஸ்பிரஸ்-117 அவன் வாழ்வை நிறுத்திவிட்டது...!
கவிதா, யூ ஆர் க்ரேட்! நீ இல்லாமே என் ஒருத்தனால் இது முடிந்திருக்காது!

# ஸர்ப்ப யோகம்!

## ராண்டார்கை

**1935,** ஆகஸ்ட் மாதம்...அமெரிக்காவில் சொர்க்க லோகமோ எனப் புகழப்படும் பகுதி. கலிஃபோர்னியா! எங்கு பார்த்தாலும் செழிப்பின் முத்திரைகள்.

இதன் நடுவில்...லாஸ் ஏன்ஜல்ஸ் நகரத்தின் ஒரு பணக்காரப் பகுதி. லாகேனடா. அங்கே ஒரு அழகிய பங்களா. நடுவில்...நீச்சல் குளம். அதில் மிதந்து கொண்டிருந்தாள் மேரி... பிணமாக!

மேரி, பாவம்...கர்ப்பமாக இருந்தாள். 'பிள்ளை பெறுவது என்றாலே அவளுக்கு நடுக்கம்; பயம். அதன் விளைவு அவள் குளத்தில் விழுந்து தற்கொலையே செய்து கொண்டாள்'...இதைச் சொன்ன ராபர்ட் துக்கம் தாளாமல் தரையில் புரண்டான்...பாவம், ராபர்ட்...!

போலீஸ் வந்தது. விசாரணை நடத்தியது. மேரி துயரத்தினால் தற்கொலை செய்து கொண்டாள் என்று முடிவெடுத்தது...ராபர்ட் சில நாட்கள் துயர மிகுதியில் வீட்டில் கிடந்தான்.

**ரா**பர்ட், பெண்கள் சிகை அலங்கார நிபுணன்! அவன் கடையில் எப்போதுமே அழகிய பெண்களின் கூட்டம்...ராபர்ட்டின் விரல்கள் கத்திரியை மட்டும் பிடிக்காது; அவனை நாடிவரும் பெண்களைத் தொட்டு, தேடி, விளையாடி சில இன்பக் கிளுகிளுப்பூட்டும்! பெண்கள் அவனுக்கு ஆசையோடுவைத்த பெயர், 'விரல் விளையாட்டு வீரன்'!...

அவன் கடையில் அவனுக்கு ஒத்தாசையாக இருப்பவள் லூயிஸ். அவன் தங்கையின் மகள். நீளமான முடி. திமிறும் மார்பகம். நிலையில்லாமல் சுற்றும் கண்கள். இவளுக்கு ராபர்ட்டின் விரல் விளையாட்டு என்றால் மிகவும் பிடிக்கும். ஓய்வு நேரங்களில் இருவரும் உல்லாசமாக விளையாடுவார்கள்!

ஒருநாள் போலீஸ்காரர்களுக்கு வந்தது, ஒரு மொட்டைக் கடிதம்! அதில் மேரி இறந்ததற்குக் காரணம், கணவனின் விளையாடும் விரல்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது!

அமெரிக்காவில் ஒரு அதிசயமான சட்டம், அப்போது. நெருங்கிய உறவில் ஒருத்தியோடு தொடர்பு கொண்டால் அதற்கு 150 வருடம் ஜெயில்!

ராபர்ட்டைப் பிடித்து ஜெயிலில் தள்ளி விட்டார்கள்! மேரியின் சவம் தோண்டியெடுக்கப்பட்டது...அழுகிப்போன உடலைப் பரிசோதனை செய்தார்கள்.

...மேரியின் இடது காலில் பலத்த வீக்கம்......கட்டை விரலுக்கு அடியே பல சிறிய துவாரங்கள்! அதற்குக் காரணம், ஒருவகையான விஷப் பாம்புக் கடி!

**மே**ரியின் வீட்டுக்கு அடிக்கடி ஸ்மித் என்பவன் ராபர்டைக் காண வருவான். யார் அந்த ஸ்மித்? போலீஸ் தேடியது. அவன் உண்மைப் பெயர் 'ஷக் ஹோப்'. அவனுக்கு ஹெர்மோஷா பீச் என்ற இடத்தில் ஹோட்டலில் வேலை! போலீஸ்காரர்கள் சாதாரண உடையில் அந்த ஹோட்டலுக்குச் சென்றார்கள். சர்வரான ஷக் அவர்களுக்கு "என்ன வேண்டும்"? என்று கேட்டான்...

"விஷப் பாம்புகள்!" என்றார் இன்ஸ்பெக்டர். ஷக் ஆடிப் போய்விட்டான்...

**போ**லீஸ் ஸ்டேஷனில் ஷக் பேசத் தொடங்கினான்..."ராபர்ட் என் நண்பன்...அவனுக்குக் காதலிகள் ஏராளம். அதில் முக்கியமானவள் லூயிஸ். மனைவி மேரி இதையெல்லாம் எதிர்த்தாள். விளைவு, ராபர்ட் அவளைத் தீர்த்துவிட முடிவு செய்தான்...எனக்குப் பணத்தை வெட்டினான். நான் நாலைந்து விஷப்பாம்புகளை வாங்கினேன், அவனுக்காக! நீளமான ஒரு பலகைப் பெட்டி. அதற்கு மேல் ஒரு கண்ணாடி மூடி! அதன் உள்ளே பாம்புகள்...

ராபர்ட் மேரியை டைனிங் டேபிள் மீது படுக்கவைத்துக் கட்டினான். பசியால் சீறிக் கொண்டிருந்த பாம்புகள் வெறியோடு மேரியின் காலைக் கடித்துத் தின்னத் தொடங்கியது! அப்படியும் அவள் சாகவில்லை! ராபர்ட் அவளை பாத் டப்பில் அமுக்கிக் கொலை செய்து விட்டான். பின்பு உடலை நீச்சல் குளத்தில் போட்டான்...எல்லோரும் தற்கொலையென்று நம்பி விட்டார்கள்."

ராபர்ட்டும் ஷக்கும் கோர்டில் நிறுத்தப்பட்டார்கள். ராபர்ட்டுக்கு தூக்குத் தண்டனையும் ஷக்குக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டது.

ராபர்ட்டை இழந்த லூயிஸ் புதுக் காதலனுக்காகத் தேடித் திரிந்தாள். பலர் கிடைத்தார்கள். ஆனால், தன் மாமனின் விளையாடும் விரல்கள், வேறு யாரிடமும் இல்லையென்று அவள் பல வருடங்கள் கழித்து பத்திரிகையில் எழுதினாள், பலத்த சோகத்தோடு!